கழக வெளியீடு—சகூகு.

கழகப் பூங்கதைகள்

நான்காம் புத்தகம்

வேலன் எழுதியவை

திருநெல்வேலி, தென்னிந்திய
சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் லிமிடெட்.
திருநெல்வேலி :: சென்னை.

முதற் பதிப்பு: ஏப்பிரல் 1948.

Published by
THE SOUTH INDIA SAIVA SIDDHANTA
WORKS PUBLISHING SOCIETY,
TINNEVELLY, LTD.,
TIRUNELVELI & MADRAS.

பதிப்புரை

கழகச் சிறுகதைகள், கழக இனிய கதைகள் என்னும் வரிசைகளின் தொடர்பாக கழகப் பூங்கதைகள் என்னும் தலைப்பில் வெளிவரும் ஆறு புத்தகங்களில் இது நான்காம் புத்தகமாகும். சிறு பிள்ளைகட்குச் சிறு கதைகளே கல்வியில் விருப்பம் அளிக்கும் என்பது கல்வித்துறை அறிஞர் கண்டறிந்தது.

கழகத்தார்.

Printed at the B. N. Press for
P. I. C. MS. 95—B.



1. நடக்கும் வீடு

முன் ஒரு காலத்தில் ஓர் அழகிய இளவரசி இருந்தாள். அவளை மணம் செய்து கொள்வதற்குப் பல இளவரசர்கள் ஆசைப்பட்டார்கள். அவள் எல்லோரையும் மறுத்துவிட்டாள்.

ஒரு மந்திரக்காரி அவளிடம் வந்தாள். அவளை எப்படியாவது ஏமாற்றித் தூக்கிக் கொண்டு போய்விட வேண்டுமென்று நினைத்தாள். அவளை விற்றுப் பணம் சம்பாதிக்கலாம் என்று அவள் எண்ணினாள்.

"கண்மணி, நீ எவ்வளவு அழகாய் இருக்கிருய். எங்கள் வீட்டிற்கு வருகிருயா?" என்று மந்திரக்காரி கேட்டாள்.

"நான் உன்ஞேடு வரமுடியாது," என்று சொல்லி இளவரசி ஓட்டம் பிடித்தாள்.



மந்திரக்காரி பின்ஞல் ஓடிப்பார்த்தாள். "வருகிருயா இல்லையா?" என்று அதட்டிஞள். இளவரசி திரும்பிப் பாராமல் ஓடிவிட்டாள்.

மந்திரக்காரி தன் வீட்டிற்குப் போய்க் கதவைத் தாளிட்டாள். மந்திரம் போட்ட வுடன் வீடு நகர்ந்து சென்றது.

இளவரசி தோட்டத்தில் பூப்பறிக்கச் சென்ருள். மந்திரக்காரியின் வீடு அவள் பின்ஞல் தொடர்ந்து சென்றது.

“இளவரசி, இளவரசி,” என்று வீடு அவளேக் கூப்பிட்டது.

“யார் பேசுவது?” என்று அவள் நடுக்கத்துடன் கேட்டாள்.

“நான் ஒரு சிறிய வீடு. தனிமையாக இருக்கிறேன். யாராவது வந்து என்னிடம் குடி இருப்பார்களா என்று தேடிக் கொண்டு வந்தேன். உன்னேப்போல் அழகான பெண் என்னிடம் இருந்தால் எவ்வளவு நன்ருக இருக்கும்,” என்று வீடு சொல்லிற்று.

"சரி, நான் வருகிறேன். கதவைத் திற," என்று இளவரசி சொன்னாள்.

கதவு தானாகவே திறந்தது.

இளவரசி உள்ளே சென்றாள். கதவு "படார்" என்று மூடிக்கொண்டது. மறுபடியும் திறந்து பார்த்தாள்: வெளியில் வரமுடியவில்லை.

வீட்டின் உள்ளே மந்திரக்காரி நின்றுகொண்டிருந்தாள். பல்லைக்காட்டிச் சிரித்தாள். "நான் உனக்கு நல்ல மாப்பிள்ளையாகப் பார்த்துக் கொடுக்கிறேன். இந்த வீடு உன்னை எங்கே வேண்டுமானாலும் கொண்டுபோய் விடும்," என்று சொன்னாள்.

இளவரசி கண்ணீர் விட்டு அழுதாள். கண்ணீர் ஆறாகப் பெருகி வீட்டிற்கு வெளியில் ஓடிற்று.

எதிரில் ஒரு பொன்வண்டும் வெட்டுக்கிளியும் வந்தன.

"அது என்ன? ஒரு வீடு நகர்ந்து செல்கிறதே," என்று வண்டு கேட்டது.

"ஆம், அந்த வீட்டிலிருந்து அழுகுரல் கேட்கிறதே," என்று வெட்டுக்கிளி சொல்லிற்று.


உடனே, அவை ஓடிப்போய் வன தேவதை இடம் சொல்லின.

வனதேவதை ஓடிவந்து மந்திர வீட்டைத் திறந்து இளவரசியைக் காப்பாற்றியது. மந்திரக்காரிக்குச் சாபம் கொடுத்தது.

"நீ எப்பொழுதும் இந்த வீட்டிலேயே பதுங்கிக் கிடக்கவேண்டியது. நீ வெளியில் போகும்போது இந்த வீட்டையும் இழுத்துச் செல்ல வேண்டியது. எதிரில் யாராவது வந்தால் உன் முகத்தைக் காட்டாமல் உள்ளே மறைந்துகொள்ள வேண்டியது. நீ இளவரசியைத் திருடின

தற்கு இதுதான் சரியான தண்டனை," என்று வனதேவதை சொல்லிற்று.

மந்திரக்காரி நத்தைப் பூச்சியாக மாறிப் போய்விட்டாள். இதனால்தான் நத்தை போகும் இடங்களுக்கெல்லாம் தன் வீட்டைச் சுமந்து செல்கிறது.





2. சிரிப்பு மருந்து

ஓர் ஊரில் மூன்று பையன்கள் இருந்தார்கள். அவர்கள் மூவரும் அழுததே இல்லை. எப்பொழுதும் சிரித்துக் கொண்டே இருப்பார்கள்.

அவர்களுடைய பாட்டி அதற்கு நேர் மாருகச் சிரிப்பதே கிடையாது. ஒரு புன்னகை கூட வராது. அவர்களிடம் குற்றம் கண்டுபிடிப்பதே அவளுடைய முதல் வேலையாக இருந்தது.

பாட்டி அடுத்த ஊருக்குப் போயிருந்தபோது காய்ச்சல் வந்து படுக்கை

யாய்ப் படுத்திருந்தாள். அம்மா, பையன்களிடம் ஆரஞ்சுப் பழங்களைக் கொடுத்துப் பாட்டியிடம் கொண்டுபோய்க் கொடுத்து வரும்படி சொல்லி அனுப்பினாள்.

பையன்கள் ஒரு காட்டு வழியாகப் போகவேண்டி இருந்தது. அங்கே மரத் தடியில் ஒரு கோமாளி உட்கார்ந்திருந் தான். அவன் ஒரு வெண் புறாவைக் கையில் வைத்துக்கொண்டு இருந்தான்.

"மூன்று பேரும் எங்கே போகிறீர் கள்," என்று கேட்டான்.

"பாட்டிக்கு உடம்பு சரி இல்லை. அம்மா பழம் கொடுத்தனுப்பினார்கள்," என்று பெரிய பையன் சொன்னான்.

"நானும் வரட்டுமா ?" என்று கோமாளி கேட்டான்.

அம்மா என்ன சொல்வார்களோ? பாட்டிக்கு இதெல்லாம் பிடிக்காதே. பையன்களுக்கு ஒன்றும் புரியவில்லை.

“நீங்கள் என்ன நினைக்கிறீர்கள் என்று எனக்குத் தெரியும். நான் வரத்தான் போகிறேன். முதலில், உங்கள் பாட்டியை நான் பார்க்கவேண்டும். இரண்டாவதாக, நீங்கள் இந்தக் காட்டுப்பாதையில் துணை இல்லாமல் போகக் கூடாது,” என்று கோமாளி சொன்னான்.



எல்லோருமாகப் புறப்பட்டுச் சென்றனர். பாட்டி இருக்கும் வீட்டிற்கு வந்து கதவைத் தட்டினார்கள்.

கதவு திறந்தது. பாட்டி ‘உர்’ என்று பார்த்தாள்.

“உங்களுக்கு இங்கே என்ன வேலை? எல்லோரும் ஓடிப்போய் விடுங்கள்,” என்று கூவினாள்.

“அம்மா உங்களுக்குப் பழம் அனுப்பி இருக்கிறார்கள்,” என்று முதல் பையன் சொன்னான்.

“பழம் சாப்பிட்டால் உடம்புக்கு நல்லது என்று அம்மா சொன்னார்கள்,” என்று இரண்டாவது பையன் சொன்னான்.

“சீ, சீ, இந்தப் பழம் புளிக்கும். இதைச் சாப்பிட்டால் உடம்பு இன்னும் கெட்டுப் போகும். பழத்தை எடுத்துக்கொண்டு ஓடுங்கள்,” என்று பாட்டி கத்தினாள்.

“அந்தக் கோமாளி யார்? அவனுக்கு இங்கே என்ன வேலை,” என்று பாட்டி கேட்டாள்.

“பாட்டி, தங்களுக்கு நல்ல மருந்து கொண்டு வந்து இருக்கிறேன். உங்கள் கையைக் கொஞ்சம் பார்க்கலாமா?” என்று கோமாளி கேட்டான்.

அவள் கையைப் பிடித்து மெள்ள நசுக்கினான்.

" ஐயோ ; கை வலிக்கிறதே !" என்று பாட்டி கத்தினுள்.

" ஒன்று மில்லே. சிரிப்பு மருந்து சாப்பிட்டால் உடனே உடல் நலம் அடையும்," என்று கோமாளி சொன்ஞன்.

" என்ன சொன்னீர் ? சிரிப்பு மருந்தா? என் உயிர் போனுலும் அதை நான் சாப்பிடமாட்டேன். நான் குழந்தையாக இருந்ததுமுதல் இதுவரை சிரித்ததே கிடையாது," என்று பாட்டி சொன்ஞள்.

" அடடா, பாவம் பாவம், இப்பொழுது சிரிப்பு மருந்துதான் உங்களேக் காப்பாற்றப் போகிறது. கொஞ்சம் சிரித்துக் கொண்டே இதைக் குடித்துவிடுங்கள்," என்று கோமாளி சொன்ஞன்.

" சிரிப்பதா ! அந்த வார்த்தையை என் காதிலேயே போடவேண்டாம்," என்று பாட்டி சொன்ஞள். முகத்தைச் சுளித்தாள்.

" அப்படிச் செய்தால் நீங்கள் பிழைக்க முடியாது. உயிர் போகும் நிலேயில் இருக்

கிறது. இதை உடனே குடித்துவிட வேண்டும்," என்று கோமாளி சொன்னான். அவன் கையிலிருந்த புட்டியின்மேல் "சிரிப்பு மருந்து" என்று எழுதி ஒட்டி இருந்தது.

பாட்டி "நான் இந்த மருந்தைக் குடிக்கவே மாட்டேன்," என்று கூச்சலிட்டாள்.

கோமாளி முதல் பையனைக் கூப்பிட்டு, "நீ கைகளைப் பிடித்துக்கொள்," என்றான். இரண்டாவது பையன் கால்களைப் பிடித்துக்கொண்டான். மூன்றாவது பையன் பாட்டியின் மூக்கைப் பிடித்துக் கொண்டான்.

மூன்று பேரும் சிப்பாய்களைப்போல் வேலை செய்தார்கள். பாட்டி கையையும் காலையும் உதறினாள். அவளால் ஒன்றும் முடியவில்லை.

கோமாளி பாட்டியின் வாயைத் திறந்து சிரிப்பு மருந்தை ஊற்றினான்.

கண்ணை மூடித் திறப்பதற்குள் மருந்து வேலை செய்தது. அவளுடைய முகம் தெளிவடைந்தது. படுத்திருந்தவள் எழுந்து உட்கார்ந்துகொண்டு சிரிக்கத் தொடங்கினாள்.

பாட்டி எல்லோருக்கும் விருந்து வைத்தாள். பையன்களும் கோமாளியும் வயிறு புடைக்கச் சாப்பிட்டார்கள். கோமாளி கூத்தாடினான். பாட்டி அதைப் பார்த்துச் சிரி சிரி என்று சிரித்தாள்.

" நான் உங்களோடு வந்தது நன்மையாகவே முடிந்தது," என்று பையன்களிடம் கோமாளி சொன்னான்.

" ஆமாம். உம்மைப் பார்த்தாலே எங்களுக்குச் சிரிப்பு வருகிறது," என்று பையன்கள் சொன்னார்கள்.





3. இருட்டுக் கரடி

ஒரு காட்டில் ஒரு கரடி வசித்திருந்தது. அதற்கு இரண்டு தம்பிகள் உண்டு.

ஒருநாள் பெரிய கரடி இரண்டு குட்டிகளையும் அழைத்து, "நாம் இன்று தேன் வேட்டைக்குப் போகலாமா?" என்று கேட்டது.

"சரி, போகலாம். கிடைக்கிற தேனைச் சரியாய்ப் பங்குபோட்டுக் கொடுக்க வேண்டும்" என்று கரடிக் குட்டிகள் சொல்லின.

"காட்டிற்குள் எங்கேயாவது வழி தவறிப் போய்விடும்; நேரத்தோடு வீட்டிற்கு வந்து சேருங்கள்," என்று கரடி அம்மா சொல்லி அனுப்பிற்று.

அம்மா சொன்னதை அவைகள் காதில் போட்டுக்கொள்ளவில்லை. காட்டில் நெடுந்தூரம் போய்விட்டன. முடிவாக ஒரு மரத்தில் தேன் கூண்டு அகப்பட்டது. அதில் தேன் நிறைய இருந்தது.

பெரிய கரடி பேராசை பிடித்தது. மற்றக் குட்டிகளுக்குக் கொடுப்பதற்கு மனம் வரவில்லை.

"இன்னும் வேறு எங்கேயாவது போய்த் தேன் கிடைக்குமா என்று பாருங்கள். இந்தத் தேன் முழுவதும் எனக்கே தான்," என்று சொல்லிவிட்டது.

"போகிறீர்களா, இல்லையா?" என்று கடுகடுப்புடன் கேட்டது. நரநர வென்று பல்லைக் கடித்தது.

தம்பிக் குட்டிகள் "சரி சரி, நீயே சாப்பிடு; எங்களுக்கு வேண்டுவதில்லை," என்று சொல்லிவிட்டு ஓட்டம் பிடித்தன.

கரடி அண்ணு தம்பிகளை விரட்டி விட்டு அவ்வளவு தேனையும் தானே குடித்தது. வயிறு வெடித்துவிடும் போல் இருந்தது.



அந்த இடத்திலேயே நன்ருய்ப் படுத்து உறங்கிவிட்டது.

உறக்கம் தெளிந்து எழுந்து பார்த்தது. எங்கே பார்த்தாலும் ஒரே இருட்

டாக இருந்தது. இரவு வந்துவிட்டது. வீட்டிற்குப் போக வழி தெரியவில்லை.

காடெல்லாம் சுற்றிச் சுற்றி வந்தது. அதற்கு வழியே தெரியவில்லை. காட்டிலேயே வசித்திருக்கும்படி நேரிட்டது. இப்பொழுது பெரிய கரடியாகிவிட்டது. முனகிக்கொண்டும், உறுமிக்கொண்டும் திரிகின்றது. தனிமையாய் அவதிப்பட்டுக் கொண்டு இருக்கிறது.

பக்கத்து ஊர்களில் இருப்பவர்கள், அந்தக் கரடியின் அழுகுரலை இன்னும் கேட்பதாகச் சொல்கிறார்கள்.





4. மலை வீடு

ஒரு மலையின் உச்சியில் ஒரு சிறிய வீடு இருந்தது. அது மிகவும் சிறியது. அதில் ஒரு நாற்காலி போடுவதற்கும் ஒரு பானை வைப்பதற்கும் மட்டும் இடம் இருந்தது.

நாற்காலியில் ஒரு பையன் உட்கார்ந்திருந்தான். பானை விறகுக்கட்டைகளின் மேல் வைக்கப்பட்டிருந்தது.

அந்தப் பையன் வெளியில் போய் உணவு தேடுவதில்லை. அவனுக்கு வேண்

டிய உணவுகளை அந்தப் பானையே கொடுத்து வந்தது.

பால் வேண்டுமானாலும், பாயசம் வேண்டுமானாலும், உடனே பானையில் வந்துவிடும். அவன் கைகளைத் தட்டி, "எனக்கு இட்டிலி வேண்டும்," என்றால், உடனே சுடச்சுட இட்டிலி வந்துவிடும்.

அந்த வீட்டிற்கு யாரும் வருவதில்லை. பையன் தனிமையாக வசித்திருந்தான்.

ஒரு நாள் வீட்டிற்குள் 'காற்று' வந்து சேர்ந்தது. காற்றைப் பார்த்து "வெளியே போ," என்று பையன் சொன்னான்.

"நான் இங்கேயே இருக்கிறேன். உனக்கு அடுப்பு மூட்டி விறகை எரித்துத் தருகிறேன். பானையிலிருப்பதைக் கொதிக்க வைத்துக் கொடுக்கிறேன்," என்று காற்று சொல்லிற்று.

"இந்தப் பானை கொதிப்பதற்கு நெருப்பு வேண்டியதில்லை. நான் ஒரு வார்த்தை சொன்னால் உடனே கொதிக்கும்," என்று பையன் சொன்னான்.

"அப்படியானால், பானையை எதற்காக விறகின் மேல் வைத்திருக்கிறாய்?" என்று காற்று கேட்டது.

"வைப்பதற்கு வேறு இடம் எங்கே இருக்கிறது? நாற்காலிமேல் பானையை வைத்தால் நான் எங்கே உட்காருவது?" என்று பையன் கேட்டான்.

காற்று 'கொல்' லென்று சிரித்தது. பையனுக்கு அது பிடிக்கவில்லை.

"வெளியே போகிறாயா, இல்லையா?" என்று பையன் கேட்டான்.

"நான் இங்கேயே இருந்தால் உனக்குப் பாலை ஆறவைத்துக் கொடுப்பேன்," என்று காற்று சொல்லிற்று.

"எப்படி ஆற வைப்பாய்?" என்று பையன் கேட்டான்.

"அதை ஊதி ஊதி ஆறவைப்பேன்," என்று காற்று சொல்லிற்று.

"உனக்கு ஊதுவதற்குத்தான் தெரியும்போலிருக்கிறது. வேறு உன்னால் என்ன செய்ய முடியும்?" என்று பையன் கேட்டான்.


காற்று பெருமூச்சு விட்டது. பையன் தன்னுடைய குல்லாயை வெயிலில் உலர வைத்திருந்தான். காற்று அதை எடுத்து விளையாடிக்கொண்டிருந்தது. ஒரே மூச்சில் மேலே வீசி எறிந்தது. மறுபடியும் அது கீழே விழவில்லை.

பையன் வந்து எட்டிப் பார்த்தான். "கெக் கெக்" என்று சிரித்தான்.

"ஏன் சிரிக்கிறாய்?" என்று காற்று கேட்டது.


வீட்டின் கூரைமேல் போய்க் குல்லாய் மாட்டிக்கொண்டு இருந்தது.

"குல்லாய் அணிந்திருக்கும் வீட்டை நான் இன்றுதான் முதல் முதலில் கண்டேன்," என்று பையன் சொன்னான்.



காற்று தன்னால் ஆனமட்டும் சுழன்று சுழன்று அடித்துப் பார்த்தது. அதனால் குல்லாயை எடுக்க முடியவில்லை. வெட்கமடைந்து ஓடிப்போய்விட்டது.

குல்லாய் இன்னும் அந்த வீட்டின் கூரை மேலேயே இருக்கிறது. காற்று ஒரு வேளை மறுபடியும் முயற்சி செய்யலாம். அதனால் முடியாதென்று பையன் சொல்லி விட்டான்.



5. சிவப்பு ரோசா

முன் காலத்தில் சிவப்பு ரோசாவே கிடையாது. உலகத்திலுள்ள ரோசாக்கள் எல்லாம் வெண்மையாகவே இருந்தன.

ஒருநாள் வெள்ளை ரோசாவின் அழகிய பெண் விடியற்காலையில் படுக்கையை விட்டு எழுந்திருந்து மேலே நிமிர்ந்து பார்த்தாள். சூரியன் அவளை உற்றுப் பார்த்தான். அவளையே கண் கொட்டாமல் பார்த்துக்கொண்டு இருந்


தான். அவளுக்கு என்ன செய்வதென்று தோன்றவில்லை.


"என்னை ஏன் இப்படி முறைத்துப் பார்க்கிறாய்?" என்று வெள்ளை ரோசா சூரியனைக் கேட்டாள்.

"நீ மிகவும் அழகாய் இருக்கிறாய். அதனால் தான் பார்த்தேன்," என்று சூரியன் சொன்னான்.

வெள்ளை ரோசாவுக்கு நாணம் உண்டாயிற்று. கன்னங்கள் சிவந்துவிட்டன.

வெள்ளை ரோசா சிவப்பு ரோசாவாக மாறிவிட்டது. இதற்குப் பின் ரோசாவிற்குச் சிவப்புக் குழந்தைகளாகவே பிறந்தன.





6. தூங்கு மூஞ்சி

ஒரு காட்டில் ஒரு சுண்டெலி தன் ாயுடன் வசித்திருந்தது. தாய்எலி ஞ்சுக்கு ஓர் அழகான வீடு கட்டிக் காடுத்தது. குஞ்சு எலி எப்பொழுதும் ூங்கிக்கொண்டே இருக்கும். அதனுல் ாய் எலி அதற்குத் " தூங்கு மூஞ்சி " ன்று பெயர் வைத்தது. ஒருநாள தாய் லி இரை தேட வெளியில் போயிற்று. ூங்கு மூஞ்சி வீட்டின் ஒரு மூலையில் ருட்டி மடக்கிப் படுத்திருந்தது.

"நான் திரும்பி வரும் வரையில் அது மூலையிலேயே சுகமாய்ப் படுத்திருக்கும்," என்று தாய் எண்ணிற்று.

தூங்கு மூஞ்சி கண்ணைத் திறந்து பார்த்தது. வெளியில் போய் உலாவிக் காற்று வாங்கலாம் என்று நினைத்தது. வளையை விட்டு மெல்ல வெளியே வந்தது. அதனுடைய கம்பளிச் சட்டை பட்டுப் போல் மெதுவாக இருந்தது. தாய்எலி போவதற்கு முன்னால் அதைத் துடைத்து அழகுபடுத்தி வைத்திருந்தது. தூா மூஞ்சி ஓடும்பொழுது அதன் வால் மல களின்மேல் உராய்ந்தது. மலர்கள் எல்லா தூங்கு மூஞ்சியைக் கண்டு நகைத்தன.

தூங்கு மூஞ்சியின் மூக்கின்மேல் சி லென்று ஏதோ விழுந்தது. அது என்ன வாக இருக்கலாம். தன் சிறிய கையின மூக்கைத் துடைத்துப் பார்த்தது. வாலி மேலும் ஒரு சொட்டு நீர் விழுந்தது

உடனே வாலை முன்புறம் இழுத்துக் கொண்டது. அடே அப்பா என்ன மழை! தூங்கு மூஞ்சியினால் தாங்க முடியவில்லை. வீட்டை விட்டு நெடுந்தொலைவு வந்து விட்டது. தன்னுடைய அழகிய சட்டை நனைந்துபோய் விட்டால் அம்மா என்ன சொல்லுவார்கள்.

தூங்கு மூஞ்சி ஒரு புதரில் போய் மறைந்தது. அங்கேயும் மழை நீர் தேடிக் கொண்டு வந்தது. ஒரு மரத்தடிக்கு ஓடிற்று. அங்கும் சாரல் அடித்தது. சரி இன்று நனைய வேண்டியதுதான் என்று நினைத்தது.

நல்ல வேளையாய்ப் பக்கத்தில் ஒரு காளான் செடி குடையைப்போல் நின்று கொண்டு இருந்தது. தூங்கு மூஞ்சி அதன் அடியில் போய்ப் பதுங்கிக்கொண்டது. தன் முகத்தை முன்னங்கால்களின் மேல் வைத்துக் கொண்டு வாலை மடக்கிக்

கொண்டு சுகமாய்ப் படுத்திருந்தது. ஒன்று, இரண்டு என்று இருபது வரையில் எண்ணுவதற்குள் தூங்கு மூஞ்சி உறங்கி விட்டது.

இந்த எலியைப் போலவே குருவியும் மழையில் அகப்பட்டுக் கொண்டு தங்குவதற்கு இடம் இல்லாமல் தவித்துக்கொண்டு இருந்தது. அதன் இறகு நனைந்துபோய் விட்டால் பறக்கமுடியாது. நடந்துதான் போகவேண்டும். குருவிக்கு நம்மைப்போல் மெதுவாய் நடப்பதற்குப் பிடிக்காது. இறக்கைகளை நனையாமல் வைத்துக்கொள்வதற்கு வழி ஒன்றும் தோன்றவில்லை. தற்செயலாய்க் காளான் குடையையும் அதன் அடியில் உறங்கிக்கொண்டிருக்கும் எலியையும் பார்த்துவிட்டது.

“நமக்கும் அதில் இடம் செய்துகொள்ளலாம்,” என்று குருவி நினைத்தது. குடையின் மற்றொரு பாதியில் குருவி வந்து

நுழைந்து கொண்டது. தூங்கு மூஞ்சி தூங்கிக்கொண்டே இருந்தது. குருவியி னால் சும்மா இருக்க முடியவில்லை. ஏதாவது வேடிக்கை செய்யலாம் என்று நினைத்தது. ஓர் அசட்டுச் சிரிப்பும் சிரித்தது. காளான் குடையை வேரோடு பிடுங்கிக்கொண்டு மேலே பறந்து சென்றது.



தூங்கு மூஞ்சி அப்பொழுது தான் ஒரு நல்ல கனவு கண்டுகொண்டு இருந்தது. ஒரு பெரிய நெல் களஞ்சியத்தில் தான் இருப்பதாகவும் வேண்டிய மட்டும் தின்று விட்டுப் புரளுவதாகவும் அதற்குத்

தோன்றிற்று. மறு விநாடியில் தட தட வென்று மழை பொழிந்தது. உறக்கம் கலைந்தது. அதன் உடல் நடுங்கிற்று. கண்ணைத் திறந்து பார்த்தது. மறைவு ஒன்றும் இல்லாமல் மழையில் நனைந்து கொண்டிருப்பது தெரிந்தது. என்ன நேர்ந்திருக்கும்? இப்பொழுது தூங்கு மூஞ்சி நன்றாய் விழித்துக் கொண்டது.

"அடடா, என் காளான் குடை எங்கே?" என்று உளறிக் கொண்டே வீட்டை நோக்கி நடந்தது.



கழக வெளியீடு: ௪௧௫

கழகப் பூங்கதைகள்

நான்காம் புத்தகம்

Publishers :

THE SOUTH INDIA SAIVA SIDDHANTA WORKS
PUBLISHING SOCIETY, TINNEVELLY LTD.
6, CORAL MERCHANT STREET, MADRAS, 1.

Head Office :

24, EAST CAR STREET, THIRUNELVELI.

விலை அணா 6